முருகப்பெருமான் துணை

**மகான் ஆனாய நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**21.09.2023**, வியாழக்கிழமை

1. அறமே வடிவான வள்ளலே
ஆறுமுக அவதார ஞானியே
வரம்பல பெற்ற தவசியே
வாழும் ஞானியே பெருமை கூறி
2. கூறியே சோபகிருது தரிவை திங்கள்
குறைவிலா சதுர்திகதி குருவாரம்
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 04 ம் நாள், 21.09.2023, வியாழக்கிழமை)
அறிவுரை ஆசிதனை ஆனாய நாயனாரும்
அருளுவேன் உலகநலம் பெற
3. நலம்தரும் சன்மார்க்க நெறி
ஞானிகளை வணங்க வழிகாட்டி
பலம் சேர்க்கும் வண்ணமிருக்க
பயபக்தி கொண்டு உலகமக்கள்
4. உலகமக்கள் அரங்கமகானின்
உயர் திருவடி பற்றி வருக
கலகமில்லா பாதுகாப்புமிக்க
கருணை நிறைந்த வாழ்வாக
5. ஆகவே அற்புதம் கண்டிட
அமைதியும் மகிழ்வும் கூடிய
வகையான வாழ்வும் கண்டு
வளமான நிலை அடைவர்
6. அடைவரே நல்லோர் தொடர்பு
ஆற்றல்பட குருவருள் துணைவர
தடைகள் அத்தனையும் வென்று
தனிப்பெருஞ் சக்தியாக மாறுவர்

7. மாறுவர் மாயை இன்னலிலா
மரணம் வெல்லும் வண்ணம்
தேறுவர் சக்தி மிக்கவர்களாக
தேசநலம் காக்கும் வண்ணம்
8. வண்ணமுடன் சிறந்த நல்
வள்ளல்களாக ஞானிகளாக
எண்ணமெல்லாம் மேம்படவே
எல்லா வகையும் தேறி
9. தேறியே தேசிகன் அவதார
தனிப்பெரும் சூட்சுமம்
அறிந்து தெளிந்து ஒன்றி
அகலா பெருவாழ்வு காண்பர்
10. காண்கவே அரங்கன் காட்டும்
கலியின் அற்புதம் பலவற்றை
உண்மை வழிகாட்டல் தனை
உரிமைபட செய்யும் சோதனைகளை
11. சோதனைகளை ஏற்றுத் தொடர
சுத்த சன்மார்க்க பலம்கண்ட
ஆதரவாளர்களாக ஞானிகளாக
அனைவரும் தேறி அழியாமை பெறுவர்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—